வகுப்பு : பத்து தமிழ் வகுப்பேடு

# இரட்டுற மொழிதல் (செய்யுள்)

பின்வரும் பாடல்வரிகளைப் படித்து அதன் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி :

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்"

1. முத்தமிழ் - இலக்கண நெறி தருக.

   முத்தமிழ் - பண்புத்தொகை

2. மெத்த வணிகலன் - இருபொருள் தருக.

   மெத்த வணிகலன் - மிகுதியான வணிகக் கப்பல்கள்
   மெத்த வணிகலன் - ஐம்பெருங்காப்பியங்கள்

3. ஆழி - பொருள் தருக.

   ஆழி - கடல்

4. தமிழழகனாரின் இயற்பெயர் யாது?

   தமிழழகனாரின் இயற்பெயர் சண்முக சுந்தரம் என்பதாகும்.

5. தமிழழகனாரின் படைப்புகளைக் குறிப்பிடுக.

   தமிழழகனாரின் படைப்புகள் :

   - துளித்துளி
   - பூமத்தாப்பு
   - ஒளியைத்தேடி
   - மழலையமுதம்
   - காமாட்சி அந்தாதி

6. இரட்டுற மொழிதல் - பொருள் தருக.

   ஒரு சொல்லோ , தொடரோ இரு பொருள்பட வருவது 'இரட்டுற மொழிதல்' எனப்படும்.

7. சிலேடையின் வகைகள் யாவை?

சிலேடையணி - செம்மொழி சிலேடை , பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும்.

8. மூன்று வகையான சங்குகள் யாவை?

வெண்சங்கு , சலஞ்சலம் , பாஞ்சசன்யம் ஆகியவை மூன்று வகையான சங்குகள் ஆகும்.

## சிறுவினா :

1. தமிழழகனார் தமிழையும் , கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.

தமிழழகனார் தமிழையும் , கடலையும் இரட்டுற மொழியும் முறை :

தமிழ் :

- இயல் , இசை , நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல் , இடை , கடை ஆகிய முச்சங்கங்களாள் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெரும் காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப் பெற்றது.

கடல் :

- கடல் முத்தினையும் , அமிழ்தத்தையும் தருகிறது.
- வெண்சங்கு , சலஞ்சலம் , பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளை தருகிறது.
- தன் அலையால் சங்கினை தடுத்து நிறுத்தி காக்கிறது.

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

என தமிழையும் , கடலையும் இரட்டுற மொழிகின்றார்.